**அன்புடையீர்,**

வணக்கம், எமது திருவள்ளுவர் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், சூலப்புரத்தில் அமைந்துள்ளது. கிராமப்புறத்தில் சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கியப் பெண்களுக்குக் கல்வியைக் கொடுக்கும் நோக்கில் **"கேடுஇல் விழுச்செல்வம் கல்வி"** எனும் திருவள்ளுவரின் கல்விக் கொள்கையைக் கருத்தில் கொண்டு 2013 ஆம் ஆண்டு சூலை மாதம் 10 ஆம் தேதி தொடங்கப்பட்டது. எமது கல்லூரியில் கற்றல், திறன் வெளிப்பாடு, கலாச்சார மேம்பாடு, பணிவாய்ப்பு, மற்றும் துறை சார்ந்த ஆய்வுகள், நிகழ்வுகள் போன்றவற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளது.

எமது முதுகலைத் தமிழ்த்துறையில் ஆண்டுதோறும் **"தமிழ் இலக்கிய விழா"** நடத்தப்படும், இளங்கலை, முதுகலை மாணவிகளின் திறன் பயிற்சிக்காக வாரத்தின் நான்காவது நாள் **"தமிழ் மன்றம்"** செயல்பாடுகள் மூலம் மாணவிகளின் தனித்திறமைகள் வளர்க்கப்படுகிறது. ஆண்டுதோறும் எமது துறை மாணவிகள் பல்கலைக்கழகத்தேர்வு தரவரிசை பட்டியலில் இடம்பெற்று, கல்லூரிக்குப் பெருமை சேர்த்து வருகின்றனர்.

ஒரு சமூகத்தில் மக்களாட்சி நிலைத்திருக்க வேண்டுமாயின், அந்தச் சிந்தனையைப் பாதுகாக்கக் கூடிய கருவிகளாகச் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பனவற்றின் தேவை மிகவும் அதிகமாகவே காணப்படும். அந்த வகையில் எந்த சமூகத்தில் இவ்வாறான மக்களாட்சித் சிந்தனைகள் இல்லையோ அச்சமூகம் சீர் குலைந்ததாகவும், சர்வாதிகாரப் போக்கு உடையதாகவும், முரண்பாடுகள் நிறைந்ததாகவுமே இருக்கும். எனவே சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பன சமூகத்துக்குத் தேவையான அம்சங்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இந்தச் சிந்தனைகள் 18-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாகத் தோன்றியதாகக் கருதப்படுகின்றது.

ஆனால், பரந்துபட்ட வரலாற்றுப் பின்புலம் கொண்ட தமிழ்ச் சமூகத்தில் இந்த மூன்று சிந்தனைகளும் காலந்தோறும் நின்று பயணப்பட்டு வந்துள்ளன. சான்றாக, **"எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே"** எனச் சுதந்திரம் பாடியதும், உலகைத் தம் ஒரு குடையின் கீழ் ஆளுகின்ற அரசனுக்கும் அன்றாடம் தேடி உண்ணும் வேடவனுக்கும் **"உண்பது நாழி உடுப்பது இரண்டே"** எனச் சமத்துவம் பாடியதும். **"நும்மொடு ஐவரானோம்"** எனச் சகோதரத்துவம் பாடியதும் தமிழ்ச் சமூகமே ஆகும்.

இப்படியான பாரோர் போற்றும் சிந்தனைகளைத் தம்மகத்தே கொண்டு வந்த இந்தச் சமூகத்தின் சிந்தனைவெளியினைப் பண்டைய இலக்கியம், வரலாறு, சமூகப் போராட்டம் தொடங்கி இன்றைய சமகாலச் சிந்தனை வரை வெளிப்படுத்த வேண்டியதை மையமாகக் கொண்டே **"தமிழ்ச் சமூகச் சிந்தனைவெளியில் சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம்"** என்னும் பொருண்மையில் இந்தப் பன்னாட்டுக் கருத்தரங்கம் அமையப்பெற உள்ளது.

ஆகவே. தமிழ் இலக்கிய ஆர்வலர்களும், பேராசிரியப் பெருமக்களும், கல்விப்புலம், சார்ந்த ஆய்வாளர்களும், சமூகப் பண்பாட்டு ஆய்வாளர்களும் தங்களின் ஆழமிக்கக் கருத்தினைக் கட்டுரையாக வழங்க வேண்டுமாறு வேண்டுகின்றோம்.

**ஆய்வுக்கான களங்கள்**

1. பழந்தமிழரின் சமத்துவச் சிந்தனைகள்
2. இலக்கியத்தில் சுதந்திரச் சிந்தனைகள்
3. பெண் சுதந்திரச் சிந்தனைகள்
4. பாலினச் சமத்துவச் சிந்தனைகள்
5. சாதியச் சமத்துவச் சிந்தனைகள்
6. இலக்கியத்தில் பொதுவுடைமைச் சிந்தனைகள்
7. குடும்ப உறவுகளில் சுதந்திரச் சிந்தனைகள்
8. குடும்பம் - சமூகம் - கட்டமைப்பும் கட்டுடைப்பும்
9. தொழில்நுட்ப வளர்ச்சியும் ஆதிக்க மனப்பான்மையின் கட்டுபாடுகளும்
10. அரசியல்வெளிகளில் சமத்துவம் - சமத்துவமின்மை
11. சுதந்திரப் போக்கில் இன்றைய இலக்கியவாதிகள்
12. இலக்கிய உருவமும் சுதந்திரப் பார்வையும்
13. வரலாற்றில் சுதந்திரச் சிந்தனைகள்
14. அறியப்படாத சுதந்திரப் போராட்ட ஆளுமைகள்
15. பண்பாட்டுச் சுதந்திரமும் நவீன இலக்கியமும்
16. உலக வரலாறும் சகோதரச் சமத்துவமும்
17. நில அடிப்படையிலான சகோதரச் சமூகம்
18. நாட்டார் பாடல்களில் சமத்துவச் சிந்தனைகள்
19. கோயில்களும் சமத்துவப் போக்குகளும்
20. மொழியும் மொழிவழி தேசியப் போக்கும்

இவை போன்று வேறு தலைப்புகளிலும் கட்டுரைகள் அமையப்பெறலாம்.

**கட்டுரையும் கட்டணமும்**

கட்டுரைகள் A4 தாளில் (Latha) ஒருங்குறி எழுத்துருவில் ஏழு பக்கங்களுக்கு மிகாமல் அமைய வேண்டும். கட்டுரையை மின்னஞ்சலிலோ, குறுந்தகட்டிலோ (CD) வழங்க வேண்டுகிறோம்.

ஆய்வுக் கட்டுரைகள் அனைத்தும் ISSN எண்ணுடன் சிறப்புப் பதிப்பாக நூலாக்கம் செய்யப் பெற்று கருத்தரங்க நாளிலேயே வழங்கப்படும். (இணைய இதழிலும் மென்பதிப்பாக கிடைக்கும்)

பேராசிரியர்கள் ரூ. 750/-

ஆய்வாளர்கள் ரூ. 600/-

கட்டுரைக்குரிய கட்டணத்தை Principal, Thiruvalluvar Arts & Science College for Women, Soolappuram – 625 535. என்ற பெயரில் (DD) எடுத்து அனுப்பவும், அல்லது Principal, Thiruvalluvar Arts & Sci, A/C No. 835210210000001, IFSC: BKID0008352 இல் பணத்தைச் செலுத்தலாம். கட்டணத்தை வங்கிக் கணக்கில் பணமாகச் செலுத்துபவர்கள் ரசீதின் நகலைக் கட்டுரையுடன் கண்டிப்பாக அனுப்பவும்.

கருத்தரங்க நாளில் கலந்து கொள்ள இயலாதவர்கள் தங்களது ஆய்வுக் கோவையைத் தூதஞ்சலில் பெற கட்டணத் தொகையுடன் கூடுதலாக ரூ.150/- செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். 01.02.2024 அன்று வரை இறுதியாக ஆய்வுக்கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

ஆய்வாளர்கள், பேராசிரியர்கள், மொழி மற்றும் இலக்கிய ஆர்வலர்களிடம் இருந்து ஆய்வுக்கட்டுரையையும் ஒத்துழைப்பையும் வரவேற்கிறோம்.

## கருத்தரங்க அமைப்பாளர்கள்

### கல்லூரி நிர்வாகிகள்

திரு. S. இராமகிருஷ்ணன், நிறுவனர்
திரு. A. பெருமாள்
திரு. K. இராமராஜ்
திரு. S. சென்னகிருஷ்ணன்
திரு. K. சுப்ரமணி
முனைவர். R. லோகநாதன்
திரு. M. செல்வராஜ்

### கருத்தரங்கத் தலைவர்

முனைவர் A. செல்வக்குமாரி அவர்கள்
முதல்வர்

### கருத்தரங்கச் செயலர்

முனைவர் ச. இந்திராமேரி அவர்கள்
முதுகலைத் தமிழ்த்துறைத் தலைவர்

### கருத்தரங்க உறுப்பினர்கள்

திருமதி. A. பாண்டிச்செல்வி, உதவிப்பேராசிரியர்
முனைவர். A. ஜீவா, உதவிப்பேராசிரியர்
செல்வி. R. சண்முகப்பிரியா, உதவிப்பேராசிரியர்
திருமதி. N. சந்திராதேவி, உதவிப்பேராசிரியர்
முனைவர். M. கோமதி, உதவிப்பேராசிரியர்

## தமிழ்ச் சமூகச் சிந்தனைவெளியில்
## சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம்

### பதிவுப் படிவம்

பெயர் :

பணியிடம் /
பயிலும் நிறுவன முகவரி :

இல்ல முகவரி :

அலைபேசி எண் :

கட்டுரைத் தலைப்பு :

தொகை :

வங்கியின் பெயர் :

வரைவோலை எண் :

இடம் :

நாள் : **கையொப்பம்**

(இந்தப் படிவத்தை நகல் எடுத்தும் பயன்படுத்தலாம்)

******

**கட்டுரை மற்றும் வரைவோலையை அனுப்ப வேண்டிய முகவரி**


முனைவர் ச. இந்திராமேரி அவர்கள்
உதவிப் பேராசிரியர் & முதுகலைத் தமிழ்த் துறைத்தலைவர்,
திருவள்ளுவர் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, சூலப்புரம்.
அலைபேசி – 8940013274
மின்னஞ்சல் - tvrpgtamil@gmail.com


## திருவள்ளுவர் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,

(மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
சூலப்புரம், எழுமலை - 625 535, மதுரை மாவட்டம், தமிழ்நாடு

**முதுகலைத் தமிழ்த்துறை**
**&**
**முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழாய்விதழ்**
**இணைந்து நடத்தும்**

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

### அறிவிப்பு மடல்

## தமிழ்ச்சமூகச் சிந்தனைவெளியில் சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம்

**நாள் : 07.03.2024**

**நிகழிடம்**

திருவள்ளுவர் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, சூலப்புரம்.